டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 30.05.2026 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 283 - Madurai | Online Edition

# நாடு முழுவதும் வெப்பநிலை அதிகரித்து வரும் நிலையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்களை பிரதமர் வலியுறுத்தியுள்ளார்

புது தில்லி, மே 29

நாட்டின் பல்வேறு பகுதிகளில் அதிகரித்து வரும் வெப்ப நிலையை சமாளிக்க, மக்கள் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

கடுமையான வானிலை இருக்கும் சமயங்களில், மக்கள் தங்கள் உடலை நீரேற்றத்துடன் வைத்துக் கொள்ளவும், வெளியே செல்லும் போது தண்ணீர் எடுத்துச் செல்லவும், மற்றவர்களுக்குத் தண்ணீர் கொடுத்து உதவவும் வேண்டும் என மோடி வலியுறுத்தியுள்ளார்.

தலைச்சுற்றல், குமட்டல், அதீத சோர்வு போன்ற வெப்பத் தாக்கத்தின் அறிகுறிகள் குறித்து மக்கள் விழிப்புடன் இருக்கு மாறு பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

உடல்நலக்குறைவு, பலவீனம் அல்லது தலைவலியால் அவதிப்படும் எவரையும் உடனடியாக குளிர்ச்சியான, நிழற் பாங்கான இடத்திற்கு அழைத்துச் சென்று, தண்ணீரும் சர்க்கரை நீர் கரைசல் (ஓஆர்எஸ்) கிடைப்பதையும் உறுதிசெய்து உதவுமாறு அவர் மக்களை வலியுறுத்தியுள்ளார்.

கடும் வெப்பத்தின் போது குழந்தைகள், முதியவர்கள், வெளியில் வேலை செய்பவர்கள், குறிப்பாகப் பாதிக்கப்படக் கூடியவர்கள், எச்சரிக்கை அறிகுறிகளைப் புறக்கணிப்பது வெப்பத்தாக்கத்திற்கு வழிவகுக்கும் என்றும் மோடி குறிப்பிட்டுள்ளார்.

இந்த வெப்ப அலையின் போது வயதான பெற்றோர்கள், தாத்தா பாட்டிகள் மற்றும் அன்புக்குரியவர்களைத் தவறாமல் கவனித்து, நீரேற்றத்துடன் இருக்கவும், நண்பகல் நேரங்களில் வெளியே செல்வதைத் தவிர்க்கவும், போதுமான ஓய்வு எடுக்கவும் அவர்களுக்கு நினைவூட்டுமாறும் மோடி மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

கடுமையான வானிலை நிலவும் சமயங்களில் கருணையுடன் நடந்துகொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர், பறவைகள் மற்றும் விலங்குகளுக்காக வீடுகள், பால் கனிகள், மொட்டை மாடிகள், கடைகள் மற்றும் அலுவலகங் களுக்கு வெளியே தண்ணீர் கிண்ணங்களை வைக்குமாறு மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# உயிர்ம வேளாண்மையில் மண் வளம் அதிகரிக்க பல பயிர் விதைப்பு

சிவகங்கை, மே 29

பலவிதமான பல வகை பயிர்களை பயிர் செய்து நிலத்திலேயே மடக்கி உழும் போது அது நிலத்தின் எருவாக மாறி மண்வளத்தை அதிகரிக்கிறது.

மேலும் பயிர்களுக்கு கிடைக்க வேண்டிய சத்தை இயற்கை யாகவே கிடைக்க இது வழி செய்கிறது. அதற்கு நாம் பின் வருவனவற்றை பின்பற்ற வேண்டும்.

**தானியப் பயிர்கள்**

சோளம் 750 கிராம், கம்பு 250 கிராம், தினை 200 கிராம், சாமை 250 கிராம், வரகு 300 கிராம், குதிரைவாலி 250 கிராம், பனிவரகு 250 கிராம் இவற்றில் ஏதாவது 4 பயிர்களை எடுத்து கொள்ளவும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

### வாசனைப் பயிர்கள்

கொத்தமல்லி 1 கிலோ, கடுகு 1/2 கிலோ, சோம்பு 1/4 கிலோ, வெந்தயம் 1/4 கிலோ எடுத்துக் கொள்ளவும்.

### பயறு வகைகள்

பாசிப்பயறு 2 கிலோ, உளுந்து 2 கிலோ, கொள்ளு 1 கிலோ, தட்டைப்பயறு 2 கிலோ, துவரை 1 கிலோ இவற்றில் ஏதாவது 4 இரகங்களை எடுத்துக் கொள்ளவும்.

### எண்ணெய் வித்துக்கள்

எள் 250 கிராம், நிலக்கடலை 2 கிலோ, ஆமணக்கு 3 கிலோ, சூரியகாந்தி 1 கிலோ, சோயா 2 கிலோ இவற்றில் ஏதாவது 4 பயிர்களை எடுத்து கொள்ளவும்.

### தழைச்சத்து தரும் பயிர்கள்

சணப்பு 2 கிலோ, தக்கைப்பூண்டு 1 கிலோ, கொழிஞ்சி 1 கிலோ, அகத்தி 1 கிலோ, சித்தகத்தி 1 கிலோ இவற்றில் ஏதாவது 4 பயிர்களை எடுத்து கொள்ளவும்.

இவை அனைத்தும் சேர்த்து ஒரு ஏக்கருக்கு சுமார் 20 கிலோ அளவுக்கு பல வகை பயிர்களின் விதைகளை பிரதான பயிர் சாகுபடிக்கு 45 நாட்களுக்கு முன் விதைக்க வேண்டும். விதைத்த பல வகை பயிர் விதைகள் நாற்பது நாட்களில் வளர்ந்து இருக்கும். இதை அப்படியே மடக்கி உழவு செய்துவிட வேண்டும். இதனால் இதில் உள்ள இலைகள், வேர்கள் நன்கு மக்கி மண்ணோடு கலந்து மண்ணை வளப்படுத்தும். மேலும் மண்ணில் நுண்ணுயிர்களை பெருக்கம் அடையச் செய்யும். அதிக இரசாயண உரங்களை பயன்படுத்திய நிலங்களுக்கு இதே போல் பல முறை பல பயிர் விதைப்பும் மடக்கி உழவும் செய்வதால் வெகுவிரைவாக மண் வளமானதாக மாற்ற மடையும்.

வளமான மண் உயிர்ம வேளாண்மைக்கு மிகவும் அவசியம். பல்வேறு நுண்ணுயிர்கள் மற்றும் மண் புழு வளர ஏற்ற மண் இயற்கை முறையில் சாகுபடிக்கு மிகவும் உகந்தது என சிவகங்கை விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் சீ.சக்திகணேஷ் தெரிவித்துள்ளார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் பழங்களை மூலப் பொருளாக கொண்ட உணவுகள் : ஓர் அலசல் ஆய்வு

### அடுப்பில்லா பழ உணவுகளின் நன்மைகள்

அடுப்பில்லா சமையலில் பழங்களை அடிப்படையாகக் கொண்ட உணவுகளை உட்கொள்வது பல ஆரோக்கிய நன்மைகளை வழங்குகிறது.

● **சமச்சீர் உணவு :** அடுப்பில்லா பழ உணவுகள் ஒரு சமச்சீர் உணவின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். புரதம் மற்றும் பிற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான உணவு முறைக்கு இது ஒரு துணை மட்டுமே.

● **சர்க்கரை அளவு :** பழங்களில் இயற்கையான சர்க்கரை இருந்தாலும், அதிகப்படியான பழங்களை உட்கொள்வது சர்க்கரை அளவை அதிகரிக்கலாம், குறிப்பாக நீரிழிவு நோயாளிகள் கவனமாக இருக்க வேண்டும்.

**முடிவுரை :** அடுப்பில்லா சமையலில் பழங்களை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்படும் உணவுகள் ஆரோக்கியமான, சுவையான மற்றும் எளிமையான உணவுத் தேர்வுகளாகும். இவை உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்குவதுடன், சமையல் நேரத்தையும் குறைக்கிறது.

சரியான சுகாதார முறைகளைப் பின்பற்றி, சமச்சீர் உணவு முறையின் ஒரு பகுதியாக இந்த உணவுகளை உட்கொள்வதன் மூலம், அவற்றின் முழுமையான நன்மைகளைப் பெறலாம். இருப்பினும், தனிப்பட்ட உடல்நலத் தேவைகள் மற்றும் ஒவ்வாமைகளைக் கருத்தில் கொண்டு பழங்களைத் தேர்ந்தெடுப்பது முக்கியம்.

நாளை முதல் ஜூஸ் (குளிர்பானம்) வகைகள் வெளி வருகிறது.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

## வாழை மற்றும் கறிவேப்பிலையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி

கோயம்புத்தூர், மே 29

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் வாழை மற்றும் கறிவேப்பிலையிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருட்களைத் தயாரிக்கும் பயிற்சி 03.06.26 மற்றும் 04.06.26 ஆகிய நாட்களில் நடைபெறும். கீழ்க்காணும் உணவு பொருட்களை தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படும்.

- வாழைப் பொடி
- வாழைப் பூ ஊறுகாய்
- வாழை சத்து மாவு
- கறிவேப்பிலை பொடி
- கறிவேப்பிலை சாத பொடி
- வாழைப் பழ ஜாம்
- வாழைத் தண்டு மிட்டாய்
- வாழை ஐஸ்கிரீம் மிக்ஸ்
- கறிவேப்பிலை பேஸ்ட்

ஆர்வமுள்ளவர்கள் இணையதளத்தில் வழங்கப்பட்டுள்ள இணைப்பு மூலம் https://tnau.ac.in/site/aecri-cbe/department-of-pht-about-department / ஆன்லைனில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது மற்றும் ரூ.1,770/- (ரூ.1500/- + GST 18%) – பயிற்சி முதல் நாளன்று ரொக்கமாக அல்ல, G Pay மூலம் செலுத்த வேண்டும்.

**பயிற்சி நடைபெறும் இடம் :** அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், (பேருந்து நிறுத்தம் : வாயில் எண். 7, மருதமலை சாலை வழி) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003.

பயிற்சி காலை 9 மணி முதல் மாலை 5 மணி நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு பேராசிரியர் மற்றும் தலைவர், அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையம், வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் – 641 003. அலைபேசி எண் : 94885 18268, தொலைபேசி எண் : 0422-6611340, மின்னஞ்சல் : phtc@tnau.ac.in தொடர்பு கொள்ளலாம்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# கோழி வளர்ப்பில் நோய்த்தடுப்பு மற்றும் நோய் கட்டுப்பாட்டு முறைகள்

மாறி வரும் தட்ப வெட்ப சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு கோழி வளர்ப்பில் விவசாயிகள் உரிய உயிர் பாதுகாப்பு முறைகளில் கவனம் செலுத்த வேண்டியது முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு தற்சமயம் நிலவும் நோய் பரவல் மற்றும் புதிய நோய் கிருமிகளின் வீரியமும் அதிகமாக உள்ள சூழலில் அவசியம் ஆகிறது.



நோய் தடுப்பு முயற்சி என்பது ஓர் கூட்டு முயற்சியாகும். பண்ணை யாளர்கள், கால்நடை மருத்துவர்கள். விஞ்ஞானிகள், அரசியல் தலைவர்கள், பொருளாதார நிபுணர்கள், பொதுநல தொண்டர்கள், வானொலி, தொலைக் காட்சி, பத்திரிக்கையாளர்கள், தடுப்பு மருந்து தயாரிப்பாளர்கள், குஞ்சு பொரிப்பக உரிமையாளர்கள், தீனி தயாரிப்பாளர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து ஒருங்கிணைந்து நோய் தடுப்பு முறைகளை நிறைவேற ஒத்துழைக்க வேண்டும்.

உயிர் பாதுகாப்பு நோய் தடுப்பு முறைகளை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும். முக்கியமாக இறந்த கோழிகளை சுகாதார முறையில் அப்புறப்படுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல் பயன்படுத்திய ஆழ்கூளக்கழிவை கம்போஸ்ட் செய்து அப்புறப்படுத்த வேண்டும். தண்ணீர் மூலம் நோய் கிருமிகள் பரவாமல் தடுக்க வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட கிருமி நாசினி மருந்தை (குளோரின்) தண்ணீரில் கலக்க வேண்டும்.



காற்றோட்டமான கொட்டகை வசதி, வாகனங்கள், பார்வை யாளர்கள், முட்டைத்தட்டு போன்றவற்றின் நடமாட்டத்தை கட்டுப் படுத்துதல் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டும். நோய் எதிர்ப்புத் திறனின் அளவை கணித்து. அதை பொருத்து தடுப்பூசி மருந்தை பயன்படுத்த வேண்டும்.

## கிருமி நீக்கம் செய்யும் முறைகள்



பொதுவாக பண்ணையாளர்கள், தங்கள் பண்ணைகளில் முதல் ஒரு வருடம் கோழி வளர்ப்பு நல்ல பலனைத் தந்த தாகவும், அதற்குப் பிறகு படிப்படியாக இலாபம் குறைந்து விட்டது என்றும், அதற்குக் காரணம் குஞ்சுகளும் தீவனமும் தர மற்றவை என்று புகார் கூறுவார்கள். இதனுடைய உண்மை என்னவென்றால், கோழிப்பண்ணை பழையது ஆக ஆக நோய்க்கிருமிகளால் தாக்கப்பட்டு. நோயை உண்டு பண்ணும் கிருமிகள் தீவிரம் அடைந்துவிடும். அதனால் குஞ்சுகள் பண்ணைக்கு வந்த நாள் முதல் அவை நோய்த் தாக்குதல்களை எதிர்த்து. தன்னைப் பாதுகாக்க போராடுவதிலேயே தன்னுடைய சக்தியை எல்லாம் இழந்து விடுகிறது. எனவே பண்ணை யாளர்கள் ஆரம்பத்தில் பெற்ற பலன்களை தொடர்ந்து பெறுவதற்கு ஒவ்வொரு முறையும் கோழிகள் பிடிக்கப்பட்டப் பின் பண்ணையை மிகச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். எனவே கீழக்கண்ட முறைகளைக் கையாண்டு சுத்தம் செய்யவும்.

1. கோழிகள் மற்றும் தீவனம் எடுக்கப்பட்ட பின், முதலில் பண்ணையிலுள்ள கோழி எருவை முற்றிலுமாக எடுத்து பண்ணையை விட்டு 300 அடி தள்ளி கொட்ட வேண்டும். பண்ணையில் ஐ.பி.டி போன்ற நோய் ஏதேனும் ஏற்பட்டிருப்பின், கோழி எருவை முழுவதும் எரித்துவிட வேண்டும். கோழி எருவை அகற்றிய பின் தரையோடு ஒட்டி இருக்கும் எருவை நீர் விட்டு சுரண்டி எடுத்து அப்புறப்படுத்தவும்.

2. பண்ணையின் வெளிப்புறம், உட்புறம் மற்றும் வலைகளில் இருக்கும் கோழி பொங்குகளையும் கழிவுகளையும் முற்றிலும் சேகரித்து எரித்து விடவும்.

3. பண்ணை உபகரணங்களான பீடர்கள். டிரிங்கர்கள், சிக் டிரிங்கர்கள் மற்றும் பீடர். டிரிங்கர் கயிறுகள், படுதா போன்ற வற்றை பண்ணைக்கு வெளியே கொண்டு சென்று தண்ணீரில் நன்கு கழுவ வேண்டும். அதன் பிறகு சலவை சோடா கொண்டு கழுவ வேண்டும். இவ்வாறு செய்த பின் 4% பார்மலின் கலந்த தண்ணீரில் ஊறவைத்து. பிறகு சூரிய ஒளியில் நன்கு உலர்த்தவும்.

4. தீ உமிழ் துப்பாக்கி (Flame Gun) கொண்டு பண்ணையின் தரை, பக்கக்கம்பி வலைகள், ஓட்டின் உட்பகுதி போன்றவற்றைப் பொறுமையாகச் சுத்தம் செய்யவும்.



5. பண்ணைக்குள் உள்ள டியூப் லைட், பல்புகள், எலக்டிரிக்கல் ஒயர்கள் போன்றவற்றை பார்மலின் நீரில் நனைத்த துணி கொண்டு சுத்தம் செய்யவும்.

6. இளங்குஞ்சுகளைப் பிரித்து வைப்பதற்குப் பயனாகும் கம்பி வலைத் தட்டிகளை தீ உமிழ் துப்பாக்கி கொண்டு கிருமி நீக்கம் செய்யவும், புரூடர் அட்டைகளை ஒருமுறை பயன்படுத்தியபின் அவற்றை எரித்துவிடவும்.

7. ஆட்டோ டிரிங்கரில் உப்புப் படிவுகள் படிந்திருப்பின் அவற்றை ஹைட்ரோ குளோரிக் அமிலம் கொண்டு நீக்கவும்.

8. டிரிங்கர் டியூப்களை கட்டிவிட்டு டேங்கில் கால்பகுதி அளவு நீர் விட்டு அதில் பிளீச்சிங் பவுடரை அல்லது 5% – 10% சோடியம் ஹைப்போ குளோரேட் கரைசலை அல்லது 5% ஹைட்ரஜன் பேரொக்ஸிடே கலந்து விடவும், இந்நீர் அனைத்து டியூப்கள் மற்றும் பைப்லைனில் தேங்கி நிற்கும். 8 மணி நேரம் கழித்து எல்லா நீரையும் வெளியேற்றிவிட்டு. பின் வெறும் நீரை சுத்தம் செய்ய வேண்டும்.

9. பண்ணையின் தரைப்பகுதியல் (சிமெண்ட் தளம்) விரிசல்கள், பொந்துகள் இருப்பின் அவற்றை சிமெண்ட் பூசி அடைத்து விடவும், ஏனெனில். அவை கோழிப் பேன்கள், உண்ணிகளுக்கு இடங்கொடுத்துவிடும். தரைப்பகுதி மண் தளமாக உள்ள பண்ணைகளிலே சிமெண்ட் தளம் போடவும்,

மண்தளப் பண்ணைகளில் ஒவ்வொரு முறையும் பழைய கோழி எருவை எடுக்கும் போது 2 இன்ச் மண்ணுடன் சேர்த்து எடுக்கவும், பின் புதிய மண்ணை உள்ளே கொட்டி சமப் படுத்தவும்.



10, காஸ்டிக் சோடாவை ஒரு லிட்டர் நீருக்கு 11 கிராம் முதல் 20 கிராம் என்ற அளவில் கலந்து. அக்

கரைசலை பண்ணையின் உட்புறத் தரையில் (1000 ச.அடிக்கு 1 கிலோ) ஊற்றி ஊற வைத்து. 24 மணி நேரம் கழித்து நீர் விட்டு கழுவி அப்புறப்படுத்தவும், மண் தளப் பண்ணைகளில் இக்கரைசலைத் தெளித்து விடலாம், (காஸ்டிக் சோடாவைக் கையாளும்போது கவனம் தேவை, அதை கைகளால் தொடக்கூடாது, கரண்டிகளைப் பயன்படுத்த வேண்டும்,)

சலவை சோடாவை 1 லிட்டர் நீருக்கு 40 கிராம் என்ற அளவில் கலந்தும் தரையை ஊற வைக்கலாம், (சலவை சோடாவை சூடான நீரில் மட்டுமே கலந்து பயன்படுத்தவும்).

11, பேன், ஒட்டுண்ணி, தெள்ளுப்பூச்சி பிரச்சனைகள் பண்ணைகளில் இருப்பின் மாலத்தியான், சைத்தியான் போன்ற பூச்சிக் கொல்லிகளை (10 லிட்டர் நீருக்கு 80 மிலி – 160 மிலி) தெளிக்கலாம். ஆனால் இவற்றை குஞ்சு வருவதற்கு 10 நாட்களுக்கு முன்பாக செய்து முடிக்க வேண்டும்.

12, பார்மலினை நிரில் கலந்து (10 லி நீருக்கு 1 – 2 லிட்டர் பார்மலின்) பண்ணையின் அனைத்துப் பகுதிகளுக்கும் ஸ்பிரே செய்யவும்.

13, பண்ணைக்கு உட்புறம். வெளிப்புறங்களில் எறும்புக் குழிகள் இருப்பின் அவற்றின் மேல் சோளப்பூச்சி மருந்தைத் தூவி அவற்றை ஒழிக்கவும்.

பிறகு மருந்துடன் அவற்றைக் கூட்டி எடுத்து அப்புறப் படுத்தவும். எலி, அணில் போன்றவற்றின் நடமாட்டத்தையும் ஒழிக்கவும்.

14, சுண்ணாம்புக் கரைசலுடன் பார்மலின், மண்ணெண்ணை கலந்து (100 மிலி சுண்ணாம்பு நீர் + 5 மிலி பார்மலின் + 1 மிலி மண்ணெண்ணை) பண்ணையின் தரைப்பகுதி, பக்கச்சுவர், கோம்பை சுவர்களுக்கு வெள்ளை அடிக்க வேண்டும்.

15, சுத்தம் செய்யப்பட்ட அனைத்து பண்ணை உபகரணங்களையும் பண்ணையினுள் வைத்து பண்ணையை படுதா கொண்டு, காற்றுப் புகா வண்ணம் இறுக மூடவும். பண்ணை யின் பல இடங்களில் உயர்ந்த பாத்திரங்கள் வைத்து அதில் பொட்டாசியம் பர்மாங்கனேட்டைப் போட்டு அதில் பார்மாலின் ஊற்றி புகை மு:ட்டம் ஏற்படுத்த வேண்டும். (1000 ச.அடிக்கு 500 கிராம் பொட்டாசியம் பர்மாங்கனேட், + 1 லிட் பார்மாலின் ) இம்முறையை மிகுந்த எச்சரிக்கையுடன் கையாள வேண்டும், பார்மாலினைக் கொதிக்க வைப்பதன் மூலம் புகையை ஏற்படுத்தலாம். மற்றும் பார்மாலின் + பிளீச்சிங் பவுடர் (டி கிலோ பிளீச்சிங் பவுடர் + 1 லி பார்மாலின் கொண்டும் புகை மூட்டம் ஏற்படுத்தலாம்.

மேற்கண்ட முறைகள் மூலம் பண்ணையைச் சுத்தம் செய்வதன் மூலம் கோழிகளைத் தாக்கும் நோய்களின் வீரியம் குறைந்து, கோழி இறப்பைப் பெருமளவு குறைக்க முடியும்.

பண்ணை சுத்தம் செய்யும் போது சிறு வியங்களையும் அசட்டை செய்யாமல் கவனமுடன் செய்ய வேண்டும்.

தகவல் : *முனைவர் து.இளைய பாரதி, மருத்துவர் ச.துர்கா. முனைவர் என்.பாரதி மற்றும் முனைவர் முரளிதரன் ஜகநாதன், கால்நடை உற்பத்தி மேலாண்மை துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம். சேலம் – 636 112.*



# நம்ம அரசு - நம்ம கையில் புதிய வாட்ஸ் அப் வசதி அறிமுகம்




பொதுமக்கள் நேரடியாக அரசு துறையின் சேவைகளை பெறும் வகையில் புதிதாக பொறுப்பேற்ற தமிழக அரசு இந்த புதிய வாட்ஸ் வசதியை அறிமுகம் செய்துள்ளது. ஏற்கனவே பொதுமக்கள் அரசின் சேவைகளை பெறுவதற்கு ஆன்லைன் (ONLINE) வசதி உள்ளது. இதுமட்டுமல்ல அரசின் சார்பில் இ-சேவை மையங்களும் பட்டி தொட்டிகளில் தனியார் மையங் களும் பொதுமக்களுக்கு உதவுகின்றன.

**இந்த சேவை எதற்காக தொடங்கப்பட்டு இருக்கிறது தெரியுமா?**

பொதுமக்கள் சந்திக்கும் அன்றாட பிரச்சனைகள் பள்ளி, கல்லூரியில் சேர்வதற்கான சாதி சான்றிதழ் இன்னும் பிற சான்றிதழ் எளிதாக தங்களுடைய வாட்ஸ் அப் வாயிலாக பெற உதவுகிறது. அரசின் 20 துறைகளில் உள்ள 66 சேவைகளை இதன் மூலமாக எளிதாகவும் விரைவாகவும் பெறலாம்.

**எப்படி அலைபேசி வாட்ஸ் அப்-யில் பெறுவது?**

78452 52525 என்ற வாட்ஸ் அப் (WHATSAPP) எண்ணிற்கு வணக்கம் அல்லது (Hi) என்ற பதிவு செய்து இதன் சேவையை பெறலாம்.

தமிழில் சேவையை பெற வேண்டும் என்றால் டி ( T ) என பதிவிட வேண்டும், ஆங்கிலத்தில் பெற வேண்டுமானல் இ (E) என பதிவிட வேண்டும். ஏதேனும் உதவி தேவைபட்டால் கட்டணமில்லாத அலைபேசி வாயிலாக 1800 425 6000 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

என்னென்ன சான்றிதழ் பெறலாம்?

பிறப்பு – இறப்பு சான்றிதழ், சாதி சான்றிதழ், வருவாய் இருப்பிட சான்றிதழ் உள்ளிட்ட அனைத்து சான்றிதழ்களும் வாட்ஸ் அப் வாயிலாக எளிதாக பெறலாம். அது மட்டுமல்ல மின்சார கட்டணம், சொத்து வரி, தண்ணீர் வரி, தொழில் உரிமம் உள்ளிட்ட வசதிகளையும் மேற்கொள்ளலாம்.

**இதனால் என்ன பயன்?**

பொதுமக்களின் காலதாமதம் தவிர்க்கப்படுகிறது. அரசு அலுவலகங்களுக்கு வீணாக அலையவேண்டியதில்லை. சான்றிதழ்களின் நிலையை ஒவ்வொரு நிலையிலும் பார்த்து அறிந்த கொள்ளலாம்.

என்ன சேவைகளை பெறுவோமா, வாட்ஸ் அப் வாயிலாக.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# உரக்கடைகளில் தரக்கட்டுப்பாட்டு அதிகாரி தீவிர ஆய்வு : தலைவாசலில் பரபரப்பு



சேலம், மே 29

சேலம் மாவட்டம். தலைவாசல் வட்டாரத்தில் உள்ள தனியார் உர விற்பனை நிலையங்கள் மற்றும் கூட்டுறவு சங்கங்களில், விழுப்புரம் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) விஜய குமார் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

விவசாயிகளுக்குத் தரமான உரங்கள் தங்குதடையின்றிக் கிடைப்பதை உறுதி செய்யவும், உர விற்பனையில் நடக்கும் முறைகேடுகளைத் தடுக்கவும் இந்த அதிரடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**இருப்பு மற்றும் விலை சரிபார்ப்பு :** இந்த ஆய்வின் போது, உரக்கடைகளில் வைக்கப்பட்டுள்ள விலை மற்றும் இருப்புப் பலகை (Stock Board) நடப்பு இருப்புடன் ஒத்துப்போகிறதா என்று அதிகாரிகள் சரிபார்த்தனர். மேலும், பிஓஎஸ் (POS) எந்திரத்தில் பதிவாகியுள்ள விவரங்களின்படி உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு உள்ளதா என்றும், அரசு நிர்ணயித்த விலையை விட கூடுதல் விலைக்கு உரங்கள் விற்கப்படுகிறதா என்றும் தீவிரமாக ஆய்வு செய்யப்பட்டது.

**அதிகாரிகள் எச்சரிக்கை :** முறையான ஆவணங்களின்றி உரங்களை இருப்பு வைப்பதோ அல்லது விவசாயிகளுக்குக் கூடுதல் விலைக்கு உரங்களை விற்பனை செய்வதோ கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட உரக்கடைகளின் உரிமங்கள் ரத்து செய்யப்படுவதோடு, உரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தரக் கட்டுப்பாட்டு அதிகாரி எச்சரித்தார்.

இந்த ஆய்வின் போது, தலைவாசல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேல்முருகன், வேளாண்மை அலுவலர் ஜானகி மற்றும் துறை சார்ந்த பணியாளர்கள் உடனிருந்தனர். இந்த திடீர் ஆய்வால் அப்பகுதியில் உள்ள உர வியாபாரி களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# உர விற்பனை நிலையங்கள் ஆய்வு

## யூரியா மற்றும் டிஏபி விற்பனை செய்யும் போது விற்பனை ரசீதில் விவசாயின் கையொப்பம், தொலைபேசி எண் கட்டாயம்

புதுக்கோட்டை, மே 29

புதுக்கோட்டை மாவட்டத்தில் உர விற்பனை நிலையங்களில் ஆய்வின் போது, உரம் விற்பனையாளர்கள் கண்டிப்பாக யூரியா மற்றும் டிஏபி விற்பனை செய்யும் போது விற்பனை ரசீதில் விவசாயின் கையொப்பம், தொலைபேசி எண் இடம் பெற வேண்டும் என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர்கள் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், புதுக்கோட்டை மாவட்டத்தில் திருவரங்குளம், அறந்தாங்கி, ஆவுடையார் கோவில் ஆகிய வட்டாரங்களில் உள்ள தனியார் உரம் விற்பனை நிலையங்களில் அரியலூர் மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன் தலைமையில் வேளாண்மை உதவி இயக்குனர்கள் வெற்றிவேல், பத்மபிரியா, சவிதா மற்றும் வேளாண்மை அலுவலர்கள் பாக்கியா ஆகியோருடன் ஆய்வு செய்தார்.

ஆய்வின் போது, நமது மத்திய அரசு விவசாயிகளுக்காக உரங்களுக்கான மானியங்கள் மிக அதிக அளவில் யூரியா மற்றும் டிஏபிக்கு உரங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே விவசாயிகளுக்கு யூரியா மற்றும் டிஏபி உரங்களை அவர்களின் நிலத்திற்கு ஏற்ப மட்டுமே வழங்க வேண்டும். அதிக அளவு விற்பனை செய்யக் கூடாது. விற்பனை செய்யும் போது கண்டிப்பாக ஆதார் எண்ணுடன் பி ஓ எஸ் இயந்திரம் மூலம் பில்

போடுவதுடன் கண்டிப்பாக ஸ்டாக் புக் மற்றும் விற்பனை ரசீதில் விவசாயிகளின் பெயர் மற்றும் தொலைபேசி எண்கள் இடம்பெற வேண்டும் என உர விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதேபோல் விவசாயிகள் எப்போதும் அனைத்து பயிர்களுக்கும் ஒருங்கிணைந்த உர மேலாண்மையில் கடை பிடிக்க வேண்டும். சாகுபடி செய்வதற்கு முன் மண் மாதிரி எடுத்து அதன் ஆய்வு அறிக்கை படி கிடைக்கக்கூடிய அனைத்து வகையான தொழு உரங்கள், பசுந்தாள் பயிர், பசுந்தழைப்பயிர், பயிர் வகை பயிர்களை சுழற்சி முறையில் சாகுபடி செய்தல், அசோலா மற்றும் நீல பச்சை பாசியை பயன்படுத்துதல். அனைத்து வகையான உயிர் உரங்கள் மற்றும் அனைத்து வகையான நுண்ணூட்ட உரங்களுடன், பரிந்துரைக்கப்பட்ட உரங்களை எப்போதும் பயிர்களுக்கு அதன் வளர்ச்சி பருவங்களுக்கு ஏற்ப, சமச்சீர் வகையில் பயன்படுத்த வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன் அறிவுறுத்தினார்.

ஆய்வின்போது உரங்களை விற்பனை நிலையத்தில் பெற்ற பிறகு வேறு ஒரு மாவட்டத்திற்கோ மாற்றப்பட்டு இருப்பதை அறிந்தால் உடனடியாக உரிமைத்த ரத்து செய்வதலுடன் அத்தியாவசிய பொருள் தடைச் சட்டம் 1955 இன் படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். உரங்களை பி ஓ எஸ் இயந்திரம் மூலம் மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்,



விவசாயிகளுக்கு யூரியா உரங்களை அதிகமாக கொடுக்கக் கூடாது. யூரியா உரங்களை விற்பனை செய்யும் போது கண்டிப்பாக பில் முகவரியுடன் விவசாயியின் தொலைபேசி எண்ணுடன் விவசாயின் கையொப்பம் பெற்று கொடுக்க வேண்டும். உரம் விற்பனை நிலையத்தில் உரம் இருப்பு மற்றும் விலைப்பட்டியலை அவசியம் பராமரிக்க வேண்டும். எப்பொழுதும் விற்பனை நிலையத்தில் இருப்பு உரங்கள் சரியாக வைத்துக் கொள்ள வேண்டும். உரம் வைத்திருக்கும் கிடங்கு களுக்கு அவசியம் அனுமதி பெற்றிருக்க வேண்டும். அனுமதி பெற்றுள்ள உரங்களை மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்,

உரங்களின் அதிகபட்ச விலை மாற்றப்பட்டிருந்தால், புதிதாக வரும் உரம் மூட்டைகளை தனியாக பராமரிக்க வேண்டும். பழைய உரம் மூட்டையை தனியாகவும் வைத்திருக்க வேண்டும் உர முட்டையில் அச்சிடப்பட்டுள்ள அதிகபட்ச விலைக்கு மேல் விற்பனை செய்யக்கூடாது, என்று கூறினார்.

மேலும் விவசாயிகள் யூரியா உரத்தை அதிகமாக பயன் படுத்தக்கூடாது. அடி உரமாக பயன்படுத்தக்கூடாது, அடி உரமாக காம்ப்ளக்ஸ் உரங்களையும் பயன்படுத்த வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யூரியா உரம் கலைக் கொல்லியுடன் சேர்த்து பயன்படுத்தக் கூடாது.

விவசாயிகள் அவர்களின் பயிர் சாகுபடி பரப்புக்கு ஏற்ற வகையில் மட்டுமே யூரியாவை பயன்படுத்த வேண்டும். அதிகபட்சமாக ஒரு ஏக்கருக்கு யூரியா இரண்டு மூட்டைக்கு மேல் பயன்படுத்த வேண்டாம். டிஏபி உரங்களும் அதிக அளவு விவசாயிக்கு வழங்க வேண்டாம் பயிரின் அளவிற்கு ஏற்றாற் போல் அடி உரமாக பயன்படுத்தலாம் யூரியா மற்றும் டிஏபிக்கு பதிலாக யூரியா, நானோ டி ஏ பி பயன்படுத்த விவசாயிகளுக்கு எடுத்து கூற வேண்டும்.

வேளாண்மை விரிவாக்க மையத்தில் கிடைக்கக்கூடிய அனைத்து வகையான உயிர் உரங்களையும், அனைத்து வகையான பயிருக்கு ஏற்ற நுண் ஊட்டச்சத்து உரங்களை பயன்படுத்துவதால் பயிருக்கு வழங்கப்படும் உரம் அளவை குறைத்து, மண்ணின் வளம் அதிகரித்து உர செலவு குறைத்து அதிக மகசூல் பெறலாம் என்று வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ராதாகிருஷ்ணன் கூறினார்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அருப்புகோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தின் வேளாண்மை விரிவாக்க பணிகள்

விருதுநகர், மே 29

விருதுநகர் மாவட்டம், அருப்புகோட்டையில் அமைந்துள்ள வேளாண்மை அறிவியல் நிலையமானது (Krishi Vigyan Kendra) இந்திய வேளாண்மை ஆராய்ச்சி கழகத்தின் (Indian Council of Agricultural Research) நிதி உதவியுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்பட்டு வருகிறது.






விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்பங்களை கொண்டு சேர்த்து, வேளாண்மையை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு வேளாண்மை விரிவாக்க பணிகளை மேற்கொண்டு வருகின்றது. மேலும் புதிய வேளாண்மை தொழில்நுட்பங்களை விவசாயிகளிடம் கொண்டு சேர்த்து, உற்பத்தி திறன், வருமானம் மற்றும் நீடித்த நிலையான வேளாண்மையை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றது.

### முக்கிய வேளாண்மை விரிவாக்க பணிகள் மற்றும் விவசாயிகளுக்கான பயிற்சிகள்

உயர் மகசூல் தரும் ரகங்கள், விதை நேர்த்தி முறைகள், நெல், மக்காச்சோளம், பருத்தி, காய்கறிகள், பழங்கள், தோட்டக்கலை பயிர் சாகுபடி தொழில்நுட்ப முறைகள், மண் மாதிரி சேகரிப்பு, மண் வள அட்டை பயன்பாடு, சமச்சீர் உரப் பயன்பாடு, உயிர் உரங்கள் மற்றும் இயற்கை உரங்களின் பயன்பாடு பற்றிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது. அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை, கால்நடை மற்றும் சார்ந்த தொழில்கள், மதிப்புக்கூட்டுதல் மற்றும் தொழில்முனைவோருக்கான பயிற்சிகள் மற்றும் கால நிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் தொழில்நுட்பங்கள் பற்றிய பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றது. நீர் சேமிப்பு தொழில் நுட்ப முறைகள், ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை, ஒருங்கிணைந்த பண்ணையம், காய்கறிகள் மற்றும் பழங்களில் மதிப்பு கூட்டுதல் தொழில்நுட்பங்கள், காலநிலை சார்ந்த பயிர் திட்டமிடல் போன்ற பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

### திறன் மேம்பாடு மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு பயிற்சிகள்



மதிப்புக்கூட்டல், உணவு பதப்படுத்தல், சிறுதொழில் மேம்பாடு

போன்றவற்றில் பயிற்சிகள், சுயஉதவி குழுக்கள் மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வருவதற்கான தொழில்நுட்ப பயிற்சிகளும் அளிக்கப்பட்டு வருகின்றது.

செயல் விளக்கத்திடல்கள்




மண்புழு உரம், அசோலா மற்றும் இயற்கை வேளாண்மையில் பயிர் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், மண் வளத்தை மேம்படுத்தவும், நோய் மற்றும் பூச்சி தாக்குதலை குறைக்கவும் பல இயற்கை திரவங்கள் (பஞ்சகாவ்யா, ஜீவாமிர்தம், அமுதக் கரைசல்) உற்பத்திக்கான செயல் விளக்க திடல்கள் அமைத்து விவசாயிகளுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றது. மண்புழு உரம் என்பது மண்புழுக்களின் செயலால் இயற்கை கழிவுப்பொருட்கள் மக்கி உருவாகும் இயற்கை உரமாகும். இது மண் வளத்தையும் பயிர் வளர்ச்சியையும் மேம்படுத்தும் முக்கிய அங்கக உரமாகும். அசோலா என்பது நீரில் வளரும் ஒரு பாசி வகை தாவரமாகும். இது நைட்ரஜன் சத்தை நிலைப்படுத்தும் தன்மை கொண்டதால் நெற்பயிரில் உயிர் உரமாகவும், கால்நடை மற்றும் கோழிகளுக்கான தீவனமாகவும் பயன் படுத்தப்படுகின்றது. நாற்றங்கள் உற்பத்தி செயல் விளக்கத் திடல்கள் மூலம் பழ மற்றும் மர பயிர்களின் தரமான நாற்றுகள் உற்பத்தி மற்றும் பராமரிப்பு முறைகளை விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்பட்டு வருகின்றது. ஒருங்கிணைந்த பண்ணையம் செயல் விளக்கத்திடல் மூலம் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியான வருமானம் பெறுவது, பண்ணைக் கழிவுகள் பயனுள்ளதாக மறுசுழற்சி செய்வது, மேலும் இரசாயன உரங்களின் பயன்பாடு குறைத்து மண் வளத்தை பாதுகாப்பது குறித்த விளக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது.

**விழிப்புணர்வு முகாம்கள்**

கிராமந்தோறும் கருத்தரங்குகள் மற்றும் விவசாயிகள் கூட்டங்கள் அமைத்து மண் வள அட்டை, சமச்சீர் உரப் பயன்பாடு, உயிர் உரங்கள், நீர் சேமிப்பு போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகின்றது.

### தொழில்நுட்ப ஆலோசனைகள்

விவசாயிகளின் வயல்களில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு நோய் மற்றும் பூச்சி தாக்குதல் தொடர்பான உடனடி பரிந் துரைகள் வழங்கப்பட்டு வருவதோடு காலநிலை மாற்றத்திற் கேற்ப பயிர் திட்டமிடல் ஆலோசனைகளும் வேளாண்மை அறிவியல் நிலையம் வழங்குகின்றது.

### அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை ஊக்குவித்தல்



மண்புழு உரம், அசோலா, பஞ்சகவ்யா, ஜீவாமிர்தம், அமுதக்கரைசல் போன்றவற்றின் தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்து பயிற்சி அளித்தல். இயற்கை வேளாண்மை இடு பொருள்கள் தயாரிக்கும் முறைகளை வேளாண் விவசாயி களுக்கு வழங்கி வருகின்றது.

### விவசாயி – விஞ்ஞானி தொடர்பு ஏற்படுத்துதல்

விவசாயிகள் மற்றும் விஞ்ஞானிகள் இடையே நேரடி கலந் துரையாடல் ஏற்பாடு செய்து விவசாயிகளின் பிரச்சினைகளை கண்டறிந்து தீர்வு வழங்கி வருகின்றது.


### தகவல்கள் பரப்புதல்

துண்டுப் பிரசுரங்கள், புத்தகங்கள், வானொலி, தொலைக் காட்சி, சமூக ஊடகங்கள் மூலம் தொழில்நுட்ப தகவல்கள் வழங்கி வருகின்றது.

மேலும் கைபேசி அறிவுரைகள் மற்றும் விருதுநகர் மாவட் டத்தில் வட்டாரங்கள் தோறும் வாட்ஸ்அப் குழுக்கள் அமைத்து தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

### காலநிலை சார்ந்த வேளாண்மை தொழில்நுட்பங்கள்

வறட்சி மற்றும் மழை சார்ந்த பகுதிகளுக்கான தொழில்நுட்ப பரிந்துரைகள் மற்றும் நீர் சேமிப்பு மற்றும் காலநிலை மாற்றத் திற்கான பயிர் சாகுபடி முறைகள் பரவலாக்குதல் போன்ற பணிகளை செய்து வருகின்றது.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# தமிழ்நாட்டின் முக்கிய எண்ணெய், எரிவாயுத் திட்டங்கள் குறித்து ஆய்வு

## முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களைக் குறித்த நேரத்தில் நிறைவு செய்ய அமைச்சர் வலியுறுத்தல்

புது தில்லி, மே 29

பெட்ரோலியம், இயற்கை எரிவாயு மற்றும் சுற்றுலாத் துறைக்கான மத்திய இணையமைச்சர், சுரேஷ் கோபி, கடந்த 26.05.26 அன்று கோவையில் நடைபெற்ற கூட்டத்தில், தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த இரண்டு முக்கிய குழாய் வழி எரிவாயு திட்டங்களின் முன்னேற்றம், அதில் உள்ள சிக்கல்கள் ஆகியவை குறித்து ஆய்வு செய்தார்.

ஆய்வு செய்யப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு

1) கெயில் நிறுவனத்தின் 'கொச்சி – கூட்டநாடு – பெங்களூரு – மங்களூரு இயற்கை எரிவாயு குழாய் திட்டம்': இதன் திருத்தப் பட்ட திட்ட மதிப்பு சுமார் ரூ.5,909 கோடி ஆகும். இத்திட்டத்தின் பணிகள் சுமார் 96.6% நிறைவடைந்துள்ளன.

2) பிபிசிஎல் நிறுவனத்தின் 'இருகூர் – தேவனகொந்தி பல்நோக்கு குழாய் திட்டம்': இதன் திருத்தப்பட்ட திட்ட மதிப்பு சுமார் ரூ.1,732 கோடி ஆகும். இத்திட்டத்தின் பணிகள் சுமார் 82.6% நிறைவடைந்துள்ளன.

3) பிபிசிஎல் நிறுவனத்தின் ஈரோடு, நீலகிரி மாவட்டங் களுக்கான 'நகர எரிவாயு விநியோகத் திட்டம்': இத்திட்டத்தின் மதிப்பு ரூ.3,685 கோடி ஆகும்; இதன் பணிகள் சுமார் 44.6% நிறைவடைந்துள்ளன.




திருப்பூர் மாவட்ட ஆட்சியர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் (டிட்கோ) அதிகாரிகள், தமிழ்நாடு அரசு அதிகாரிகள், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் மூத்த அதிகாரிகள், மாநில நெடுஞ்சாலைத் துறை அதிகாரிகள், கெயில், பிபிசிஎல் நிறுவனங்களின் அதிகாரிகள், மாவட்ட நிர்வாக அதிகாரிகள், சம்பந்தப்பட்ட பிற தரப்பினர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தின்போது, தற்போது நடைபெற்று வரும் திட்டங்களின் நிலை குறித்து விரிவான விவாதங்கள் மேற் கொள்ளப்பட்டன.

பிபிசிஎல் நிறுவனத்தின் 'இருகூர் – தேவனகொந்தி குழாய் திட்டத்தின்' ஒரு பகுதியாக, திருப்பூர் மாவட்டத்தில் ஏற்கனவே உள்ள 'வழித்தட உரிமைப் பகுதிக்குள்' 64 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய் பதிப்பதில் உள்ள முக்கியச் சிக்கல்கள் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. மாநில நெடுஞ்சாலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஜலகண்டபுரம் புறவழிச் சாலை, தேசிய நெடுஞ்சாலை-844 ஆகியவை வழியாக குழாய் பதிப்பதில் உள்ள சிக்கல்கள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. மேலும், ஐஓசிஎல் திட்டத்தின் கீழ் அமையவுள்ள புதிய உந்து நிலை யத்திற்கு நிலம் கையகப்படுத்தி ஒப்படைப்பது தொடர்பாகவும் ஆய்வு செய்யப்பட்டது. ஈரோடு, நீலகிரி மாவட்டங்களுக்கான நகர எரிவாயு விநியோகத் திட்டத்தின் முன்னேற்றம் குறித்தும் அமைச்சர் ஆய்வு செய்தார்.

கெயில் நிறுவனம், தனது திட்டப் பணிகளின் நிலையை எடுத்துரைத்ததுடன், மாநில அரசின் தலையீடு தேவைப்படும் பெரிய பிரச்சினைகள் எதுவும் தற்போது நிலுவையில் இல்லை என்றும் தெரிவித்தது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த எரிசக்தி உள்கட்டமைப்புத் திட்டங்களை உரிய நேரத்தில் முடிப்பதற்கு ஏதுவாக, தடைகளை விரைவாகத் தீர்க்க வேண்டும் என சுரேஷ் கோபி வலியுறுத் தினார்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

திருப்பூர் மாவட்ட ஆட்சியரும், மாநில அரசின் சார்பில் (டிட்கோ) அமைப்பும், திருப்பூர் மாவட்டத்தில் குழாய் பதிக்கும் பணிகளில் உள்ள பிரச்சினைகளைத் தீர்க்க முயற்சி எடுப்பதாக உறுதியளித்தனர். நிலுவையில் உள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும், திட்டச் செயலாக்கத்தை எளிதாக்குவதற்கும் மாநில அரசும் மாவட்ட அதிகாரிகளும் முழு ஒத்துழைப்பு அளிப்பதாக உறுதியளித்தனர். அனைத்துத் தரப்பினரும் நெருங்கிய ஒருங்கிணைப்பைப் பேணி, தடைகளை விரைவாகத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என அமைச்சர் சுரேஷ் கோபி அறிவுறுத்தினார்.

